**கலேவல பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூன் 28 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கலேவல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நிலையான சொத்துக்களின் கூட்டுத்தொகை மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தில் பங்களிப்புச் செய்யும் கணக்கின் மீதி மற்றும் மூலதன உள்ளீட்டுக்கு நன்கொடைகளால் பங்களிப்புச் செய்யும் கணக்கின் மீதிகளின் கூட்டுத்தொகைகளிடையே 14 வருடங்களுக்கு முன்பிலிருந்து காணப்பட்டு வந்த ரூபா. 1,166,909 வித்தியாசம் மீளாய்வாண்டிலும் காணப்பட்டது.

(ஆ) சபையின் 82 மயானங்களுக்குச் சொந்தமான 116 ஏக்கர் 03 ரூட் 17 பேர்ச் அளவிலான காணிகள் மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை..

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிர்மாணக் கடன்பட்டோராக குறிப்பிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா. 1,235,000 பெறுமதியான 02 மீதிகள் நிதிக்கூற்றுகளிலிருந்து விடுபட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிர்மாணக் கடன்கொடுத்தோராக குறிப்பிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 1,388,160 பெறுமதியான 02 மீதிகள் நிதிக்கூற்றுகளிலிருந்து விடுபட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டில் இரண்டு திட்டங்களுக்கான முற்கொடுப்பனவாக ஒப்பந்தக்காரர்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா. 252,840 தொகை முற்கொடுப்பனவாக கணக்குகளில் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டினுள் சபையின் கட்டிடங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நான்கு சந்தர்ப்பங்களில் செலவிடப்பட்ட ரூபா. 6,309,885 தொகை மூலதனமாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட கடனுக்காக எதிர்வரும் வருடங்களுக்காகச் செலுத்த வேண்டியவ ரூபா. 21,735,450 கடன் வட்டித் தொகை நடைமுறைப் பொறுப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 297,735,088 கூட்டுத்தொகையான 03 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகளுக்கும் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 105,735,875 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெற வேண்டிய கணக்குகள்

நீண்டகாலமாக நிதிக்கூற்றுக்களில் மாற்றமுராது முன் கொண்டு வரப்படுகின்ற ரூபா 18,163,524 கூட்டுத்தொகையான கிடைக்க வேண்டிய 06 கணக்கு மீதிகளைத் தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 345,045,896 தொகையான 06 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கீழே காண்பிக்கப்படுகின்ற சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம். | |
| i. விதி 24 | வ2004 ஆம் ஆண்டின் பின்னர் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீதிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கவில்லை. |
| ii. விதி 123 | சபைக்குச் சொந்தமான வாகனங்களை வாடகைக்கு வழங்குவது தொடர்பாக உப விதிகள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக குடியரசின் நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571 | 02 வருடங்களை கடந்த ரூபா 1,423,173 கூட்டுத்தொகையான பொது வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய EST-6/TRORT/05/3515 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 14 வாகனங்களின் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2013 ஏப்ரல் 11 ஆந் திகதிய சிபீசீ/சீஎஸ்/06/06.02 ஆம் இலக்க | தொழில்நுட்ப உதவியாளர், வேலை அத்தியசகர், 04 சாரதிகள், களஞ்சியக் காப்பாளர், களஞ்சிய எழுதுனர் மற்றும் சிறாப்பர் ஆகிய பதிவகளை |

மத்திய மாகாண பிரதான வகிக்கும் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப் செயலாளரின் சுற்றறிக்கையின் 04 பொறுப்பு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆம் பந்தி.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,022,288 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 17,739,367 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | | | 2017 | | | | 2016 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் |
| வீதவரி மற்றும் வரி | 2,003,000 | 2,069,579 | 2,042,291 | 1,739,791 | 1,955,000 | 2,037,404 | 1,666,926 | 1,712,453 |
| வாடகை | 4,978,000 | 4,896,885 | 4,731,327 | 815,929 | 4,445,146 | 5,683,627 | 5,256,741 | 650,371 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 3,000,000 | 2,861,100 | 2,861,100 | 691,370 | 2,600,000 | 2,697,250 | 2,697,250 | 691,370 |
| ஏனைய வருமானம் | 19,850,000 | 18,684,473 | 4,816,042 | 14,425,506 | 19,300,000 | 25,923,993 | 6,961,526 | 19,069,192 |
| | 29,831,000 | 28,512,037 | 14,450,760 | 17,672,596 | 28,300,146 | 36,342,274 | 16,582,443 | 22,123,386 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான சொத்துக்களை குத்தகைக்கு வழங்கும் போது 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை குத்தகை வாடகை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதவரி அறவீடு மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டதுடன் கூடிய பெறுமதியுடைய வீதவரி அலகுகளிலிருந்து நிலுவை மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 ஆதன வரி**

-------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த ஆதன வரி மீதி ரூபா 1,650,829 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது பட்டியலிடப்பட்ட வீதவரியின் அளவு ரூபா 1,903,676 ஆக இருந்தது. அதில் 2017 ஆம் ஆண்டிற்குரிய 57 ஆன ரூபா 1,095,211 மாத்திரம் கிடைத்திருந்தது.

(ஆ) 2011 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டின் நவம்பர் வரை அங்கீகரிக்கப்பட்டிருந்த 475 கட்டிட விண்ணப்பங்களின் பேரில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்படாமை காரணமாக கிடைக்க வேண்டிய வீதவரி சபைக்கு கிடைக்காமல் போயிருந்தது.

(இ) பிரதேச அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள அரச நிறுவனங்களிடமிருந்து நிலுவை வீதவரியாக ரூபா 129,830 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

**2.2.4 குத்தகை வாடகை**

----------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 68,066 ஆன நிலுவை ஏக்கர் மீதி மற்றும் 2017 ஆம் ஆண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 14,368 உடன் ரூபா 82,434 தொகையான மொத்த ஏக்கர் வரி வருமானத்தில் மீளாய்வாண்டில் ரூபா 356 ஆன 0.43 சதவீதம் மாத்திரம் கிடைக்கப்பெற்றிருந்தத.

(ஆ) 01-06 ஆண்டு வரையான காலமாக முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 528,883 ஆன நிலுவை இறைச்சிக் கடை வாடகை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

----------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 05 வருடங்களுக்கு முன்பிலிருந்து முன்கொண்டு வரப்படுகின்ற ரூபா 691,370 ஆன நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டண மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணிப்பீட்டின் மூலம் வியாபார அனுதிப்பத்திரக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டிய இடங்கள் இனங்காணப்படாமல் கிடைக்கப்பெறும் முழு வருமானத்தை பட்டியலிடப்பட்ட வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) சபை அதிகாரப் பிரதேசத்திலிருந்து தொலைத்தொடர்பு கோபுரங்களிலிருந்து வருடாந்த அனுதிப்பத்திரக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 ஏனைய வருமானம்**

--------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) நீர் கட்டணங்கள்**

---------------------------

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை நீர்க்கட்டண மீதி ரூபா 557,025 தொகையாக இருந்ததுடன் அம்மீதிகளில் ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த ரூபா 556,020 ஆன மீதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**(ஆ) களியாட்ட வரி**

-----------------------------

10 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலம் முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 6,946 நிலுவையான களியாட்ட வரி மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(இ) முச்சக்கர வண்டி நிறுத்துமிடக் கட்டணங்கள்**

-----------------------------------------------------------------------------

மீளாய்வாண்டில் 09 முச்சக்கர வண்டி நிறுத்துமிடங்களுக்குரிய 159 முச்சக்கர வண்டிகளிலிருந்து ரூபா 55,650 அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------------

## 3.1 செயலாற்றல்

------------------

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது உபயோக சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நல விவகாரங்கள், வசதிகள் மற்றும் நலன்கள் ஆகிய சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

-------------------------------------------------

விதிக்கப்பட்டிருந்த உப விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கைவிடப்பட்ட இலக்குகள்**

---------------------------------------------

பிரதேச சபைக்குச் சொந்தமான பொது விளையாட்டரங்கின் எல்லலைக்குள் சபைக்குச் சொந்தமான வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக கராஜ் ஒன்றும் வாகனம் கழுவும் இடமொன்றையும் நிர்மாணிப்பதற்கு கலேவல கம்சவிய சனசமூக மண்டபத்துடன் ரூபா 600,000 தொகைக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் இந்நிரமாணம் குளத்தின் பாதுகாப்பு பிரதேசத்திற்குரியதென பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்ததால் அத்திவாரம் இடப்பட்டதன் பின்னர் கட்டிட நிர்மாணம் நிறுத்தப்பட்டிருந்தது.

**(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

--------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேர்கின்ற சுமார் 5 மெற்றிக் தொன் அளவிலான கழிவுகளை கலேவெல தொரகெடிவல பிரதேசத்திலுள்ள இடமொன்றில் கொட்டப்பட்டு வந்ததுடன் கழிவகற்றுவதற்காக 100x16 அடி அளவிலான மூடியுடன் கூடிய இரண்டு குழிகளும் கழிவுகளை வேறுபடுத்துவதற்காக 60x40 அடி அளவிலான ஒரு கட்டிடமும் அமைக்கப்பட்டிருந்தது. எனினும் இரண்டு குழிகளிலும் காணப்பட்ட உக்கிய கழிவுகளிலிருந்து அகற்றப்பட்ட கொம்போஸ்ட் உரத்தில் அதிகளவான பொலித்தீன் கழிவுகள் கலந்திருப்பது வெளிக்கள ஆய்வின் போது அவதானிக்கப்பட்டது.

ii. சேர்க்கப்படுகின்ற கழிவு முற்றாக வேறுபடுத்தப்படாது பொலித்தீன் கழிவுகளுடன் சேர்த்து குழிகளில் இடப்பட்ட காரணத்தினாலும் குழிகளினுள் காணப்பட்ட ஈரலிப்புத்

தன்மை காரணத்தினாலும் கழிவுகள் உக்கல் செயற்பாடானது முறையாக நடைபெற்றிருக்கவில்லை.

iii. 02 ஆம் இலக்க கழிவு வடிகாண் களத்திள் கீழ்ப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்ததனால் மழை நீர் இவ்வழியாக வழிந்தோடுதல் காரணமாக இவ்விடம் பாவனைக்குதவாத இடமாக மாறியிருந்தது.

iv. கழிவு வேறாக்கல் செயற்பாட்டினை முறைமைப்படுத்தி குழிகளுக்குள் உக்கக்கூடிய கழிவுகளை மாத்திரம் இடுவதற்கும் நல்ல தரத்திலான கொம்போஸ்ட் உரத்தினை உற்பத்தி செய்தல் தொடர்பிலும் பொலிதீன் மீள் சுழற்சி செய்தலுக்கான பொருத்தமான முறையொன்று தொடர்பிலும் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

v. உத்தேச மத்திய அதிவேக வீதி செயற்திட்டத்தின் வீதி ஓடுபாதைக்குரிய இடமொன்றில் கழிவுகள் மீள்சுழற்சி நிலையம் அமைக்கப்பட்டிருப்பதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் அறிவிக்கப்பட்டிந்ததுடன் அச்செயற்திட்டத்தை செயற்படுத்தும் போது கழிவு மீள் சுழற்சிக்காக பொருத்தமான இடமொன் வழங்குவது மற்றும் உரிய நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்தும் முறை தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

-------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்கு சொந்தமான 6 வியாபார தொகுதிகளுக்குரிய வாடகை திருத்தம் மற்றும் குத்தகை உடன்படிக்கைகள் புதுப்பித்தல் 15 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிம்சவிய அலுவலகத்திற்காக சபைக்குச் சொந்தமான கட்டிடமொன்று மதிப்பீடொன்றில்லாமல் 2013 ஏப்ரல் 24 ஆந் திகதி முதல் ரூபா 25,000 ஆன மாதாந்த வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரைிலும் மீளாய்வாண்டிற்காக 200,000 ஆன வாடகையொன்று அறவிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் சபைக்குச் சொந்தமான 02 வாகனங்களுக்காக வருமான அனுமதிப்பத்திரங்களும் ஒரு வாகனத்திற்காக காப்புறுதி சான்றிதழும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஒப்பந்தங்களிற்காக உடன்படிக்கை கைச்சாத்திடும் போது நிர்ணயிக்கப்பட்ட திகதியில் வேலை பூர்த்தி செய்யப்படாத செயற்திட்டங்களுக்காக தாமதக் கட்டணங்கள் அறவிடுவதற்கான ஏற்பாடு ஒப்பந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாமை காரணமாக தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு முடியாமல் இருந்தது.

(உ) நானாவித வருமான விடயங்களுக்காக வருமான பதிவேடு நாளது வரையாக பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.3 மனித வள முகாமைத்துவம்

-------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சபையின் பதவியணியின் வெற்றிடங்கள் 21 ஆக காணப்பட்டதுடன், .இந்த வெற்றிடங்களில் 16 இரண்டாம் மட்டத்தின் பதவியணியினராக இருந்தன.

(ஆ) பிரதேச சபையின் சில உத்தியோகத்தர்கள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் இடமாற்றம் பெறாமல் ஒரே நிலையத்தில் சேவை புரிந்து வந்தனர்.

(இ) 07 ஊழியர்களிடமிருந்து வருடக் கணக்காக அறவிட வேண்டியதாக இருந்த ரூபா 88,000 கூட்டுத்தொகையான ஊழியர் கடன் மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருகக்வில்லை.

### 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

மீளாய்வாண்டில் கிடைக்கப்பெற்ற 33 விண்ணப்பங்களிலி 26 இற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 05 விண்ணப்பங்களுக்கு மாத்திரம் இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தன.

### 3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

**கந்துரட்ட அபிவிருத்தி வங்கிக்காக கட்டிடமொன்றினை வாடகைக்குப் பெறல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 19(1) மற்றும் (xi) பிரிவுகளுக்கமைய விடயப் பொறுப்பு அமைச்சரின் அனுமதியின்றி சபைக்குச் சொந்தமான தொகைச் சந்தை நிலத்திலுள்ள கட்டடமொன்று மலையக அபிவிருத்தி வங்கிக்கு ரூபா. 38,000 மாத வாடகை அடிப்படையில் 2008 ஆம் ஆண்டு முதல் 2036 ஆம் ஆண்டு வரை குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. வங்கியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளுக்காக வாடகைத் தொகையினை ஈடு செய்து கொள்வதென ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் வங்கியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளுக்காக ஏற்பட்ட செலவுகள் தொடர்பான இணக்கப்பாடு வங்கியோடு செய்துகொள்ளப்பட்டிருக்கவிலை.

(ஆ) குறித்த கட்டிடத்திற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் 2016 திசெம்பர் 08 ஆம் திகதிய ME/RP/961 இலக்கத்தையுடைய கடிதத்தின் மூலம் குறிப்பிடப்பட்டிருந்த மாதாந்த மதிப்பிடப்பட்ட வாடகை ரூபா. 70,000 ஆக இருந்த போதும் மாதாந்த குத்தகையினை திருத்தியமைத்தல் தொடர்பான விதிமுறைகள் வரி ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படாததன் காரணமாக குறித்த மதிப்பீட்டு வாடகையினை செலுத்துவதற்கு கந்துரட்ட அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்திருக்கவில்லை.

(இ) வாடகை திருத்தியமைத்தலுடன் தொடர்பான விதிமுறைகள் ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படாமை சபைக்கு பாதகமான நிலையாக இருந்ததுடன் இதன் காரணமாக 2036 ஆம் ஆண்டு வரையிலான ரூபா 70,000 மதிப்பிடப்பட்ட வாடகை மீதான சபைக்கு ஏற்படக்கூடிய கணிப்பிடக்கூடிய நட்டம் ரூபா. 12,801,000 ஆக இருந்தது.

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.6.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

பிரதேச சபைக்குச் சொந்தமான இரண்டு வாகனங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையில் சபைக்குச் கையேற்கப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.6.2 விளைவற்ற / குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான ரூபா 3,000,000 பெறுமதியான கலி பவுசரும் ரூபா 79,000 பெறுமதியான குபோட்டா கைஉழவு இயந்திரமும் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) சபைக்குச் சொந்தமான வேன் வண்டியொன்று 2017 ஏப்ரல் மாதத்தின் பின்னர் ஓட்டத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டிருந்ததுடன் திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 101,751 மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்தது.

(இ) பிரதேச சபைகளை பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் புதிதக கராஜ் ஒன்ற நிர்மாணிப்பதற்காக 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 199,095 பெறுமதியான பொருட்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

## 3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பிரதேச சபைக்குரிய கலேவல வர்த்தக கடை தொகுதியின் புதிய கட்டிடத்தில் 15 கடைகள் 2007 ஆம் ஆண்டின் போது விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீடு ரூபா 6,750 ஆக இருந்த போதிலும் 2013 செப்தம்பர் 30 ஆந் திகதிய சபை தீர்மானத்தின் அடிப்படையில் மாதாந்த வாடகை ரூபா 3,500 வீதம் வரும் வகையில் 2013 திசெம்பர் 02 ஆந் திகதி முதல் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் திசெம்பர் மாதம் வரை சபைக்கு 159,250 ஆன வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

## 3.8 இனங்காணப்பட்ட நட்டங்கள்

சபையின் 09 வாகனங்களுக்காக வருமான அனுமதிப்பத்திரங்களை உரிய திகதிகளில் பெற்றுக் கொள்ளப்படாததன் காரணமாக தண்டப்பணமாக ரூபா 9,175 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3.9 வெளிப்படையான ஒழுங்கீனங்கள்

சபைக்குரிய 06 நூலகங்களில் 2012 ஆம் ஆண்டு முதல் கொள்வனவு செய்யப்பட்ட பத்திரிகைகள் பயன்பாட்டின் பின்னர் பழைய பத்திரிகை விற்பனை மூலம் கிடைத்த ரூபா 62,951 தொகையை சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமல் மதிப்பிழந்த காசோலை, நானாவித பொருள் பற்றாக்குறை மற்றும் பழைய நிலுவைக் கடன் மீதிகள் தீர்ப்பதற்கு பயன்படுத்தப்பட்டிருந்ததாக கண்டறியப்பட்டது.

## 3.10 பெறுகைகள்

### 3.10.1 பெறுகைத் திட்டம்

2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் பிரதேச சபையினால் பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்படாமல் 2017 ஆம் ஆண்டில் ரூபா 440,293 ஆன கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 3.10.2 ஒப்பந்த நிர்வாகம்

(அ) உள்ளூராட்சி மன்றங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் மூலதன நிகழ்ச்சித்திட்டம் - 2016 இன் கீழ் ரூபா 2,15,547 பெறுமதிக்கு தனியார் ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு கையளிக்கப்பட்டிருந்த மக்குளலுகஸ்வெவ சந்தை கட்டடித்தின் திருத்வேலைகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

i. 12 ஆம் இலக்க வேலை விடயத்தின் கீழ் நிலத்திற்கு கொங்கிரீட் இடுவதற்காக 161 சதுர மீற்றருக்காக ரூபா 136,836 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் கொங்கிரீட் இடப்பட்ட நிலம் பலமில்லாமல் இருந்தது.

ii. கீழே காட்டப்பட்டுள்ள வேலை விடயங்களுக்காக கூடுதலான கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

| செலவின விடய இலக்கம் | விபரம் | செலுத்த வேண்டிய தொகை | செலுத்திய தொகை | கூடுதலான கொடுப்பனவு |
|---|---|---|---|---|
| ---------- | --------------------- | ------------- | ------------- | ---------- |
| | | ரூபா | ரூபா | ரூபா |
| 14 | கூரை நிர்மாணம் | 562,328 | 594,663 | 32,335 |
| 15 | கூரை தகடு பொருத்துதல் | 54,054 | 60,329 | 6,275 |
| 13 | கேபல் கோன இரும்பு பொருத்துதுல் | 234,773 | 240,318 | 5,545 |
| 16 | வடிம்பு பலகை பொருத்துதுல் | 133,673 | 135,218 | 1,545 |

(ஆ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் விசேட நிதிஏற்பாடு நிகழ்ச்சித்திட்டம் -2014 இன் கீழ் ரூபா 980,000 தொகைக்கு சிங்ஹ சனசமூக சபைக்கு கையளித்து 2016 திசெம்பர் 09 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த திவுல்கஸ்கொட்டுவ பகல் இரவு கைப்பந்து விளையாட்டரங்கினை நிர்மாணிப்பது தொடர்பாக 2017 ஆம் ஆண்டின் போது பௌதீக ரீதியாக பரீட்சித்த போது விளையாட்டரங்கின் மேவுகை வலை சிதைவடைந்திருந்ததுடன் பொருத்தப்பட்டிருந்த GI குழாய்கள் முறையாக பூச்சு பூசப்படாமை, நீர் உட்புகாமையை தவிர்ப்பதற்காக End Cap பொருத்தப்படாதிருந்தமை மற்றும் தற்போது விளையாட்டரங்கு பயன்'படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---------------------------------------------------------------------

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------------

மீளாய்வாண்டில் வருமானங்கள் மற்றும் செலவினங்களுக்கு இடையே நிதிஏற்பாடு மாற்றப்பட்டதன் பின்னரும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையே கருத்திற்கொள்ளக்கூடியளவு விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 06 செலவினங்களுக்குரிய ரூபா 507,000 தொகையான மதிப்பிடப்பட்ட வருமானம் எதுவும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 54 செலவின விடயங்களுக்காக மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கு இடையே பாதகமான விலகல் 05 முதல் 200% இடைப்பட்ட வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

(இ) 52 செலவின விடயங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ரூபா 4,231,000 ஆன நிதிஏற்பாடுகளிலிருந்து எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டில் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் நிறைவேற்றுவதற்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் போதியளவில் உள்ளகக் கணக்காய்வொன்று இடம்பெறாமல் இருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2014 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய சிபீசீ/சீஎம்எஸ்/01/6 ஆம் இலக்க மத்திய மாகாண பிரதான செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்தம் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டில் 02 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் போது 01 கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) சொத்துக்கள் கட்டுப்பாடு | i. | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை |
| | ii.. | சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பாக போதியளவு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (ஆ) வாகனக் கட்டுப்பாடு | i. | வாகனங்களின் ஓட்டக் குறிப்புக்கள நாளது வரையாக பராமரித்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படாமை |
| | ii. | வாகனங்களின் எரிபொருள் எரிவு பரீட்சிக்க நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| | iii. | ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களுக்காக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படாமை |
| | iv. | சில வாகனங்களின் உரித்தினை சபைக்கு கையேற்கநடவடிக்கை எடுக்கப்படாமை. |

| | | |
|---|---|---|
| (இ) | கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் | நீண்டகாலமாக காணப்படும் கடன்பட்டோர் மீதிகள் கண்டுபிடித்து தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை |
| (ஈ) | மனித வள முகாமைத்துவம் | மூன்றாவது மற்றும் இரண்டாம் தர பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை |
| (உ) | வருமான முகாமைத்துவம் | i. வருமான சேகரிப்பின் பலவீனமான செயன்முன்னேற்றம் காரணமாக நிலுவை வருமானம் போதியளவு மிகவும் உயர்ந்ததாக காணப்பட்டது.<br>ii. வருமான சேகரிப்பிற்குரிய உரிய வருமான ஏடுகள் பேணப்படாமை.<br>iii. ஆதனங்கள் காலரீதியாக மதிப்பீடு செய்து வருமான நிலைமையைஅதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை |